# கூட்டுறவுச் சங்கங்களுக்கான நான்காம் நிலைத் தேர்தல்

## 1148 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்வு

## மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழகத்தில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கான நான்காம் நிலைத் தேர்தலில் 1148 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன்,இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

### நான்காம் நிலைத் தேர்தல்

நான்காம் நிலையில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள், கூட்டுறவு அச்சகங்கள் என மொத்தம் 57 கூட்டுறவு சங்கங்களுக்கும், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் கீழ் உள்ள தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி என மொத்தம் 58 சங்கங்களுக்கு நான்காம் நிலையில் தேர்தல் நடைபெறும் என கடந்த 17.07.2013 அன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இதற்கான தேர்தல் அட்டவணையும் அன்றே ஆணையத்தால் வெளியிடப்பட்டிருந்தது. இச்சங்கங்களில் வேட்பு மனுத்தாக்கல் 12.08.2013 அன்று நடைபெற்றது. 13.08.2013 அன்று மாலை 4.00 மணி வரை வேட்பு மனுக்கள் திரும்பப் பெற கால அவகாசம் அளிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்படவேண்டிய இயக்குநர்கள் எண்ணிக்கை 1218 ஆகும்.

### போட்டியின்றி தேர்வு

தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, மாவட்டங்களில் செயல்படும் 29 கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் 26 கூட்டுறவு அச்சகங்களில் வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுவதற்கான கால அவகாசம் முடிவடைந்ததும் 58 சங்கங்களில் 1148 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 12.8.13 அன்று தாக்கல் செய்யப்பட்ட 1218 வேட்பு மனுக்களில் அன்றைய தினத்திலேயே பரிசீலனையின்போது கண்டறியப்பட்ட தகுதியற்ற 27 மனுக்கள் நிராகரிக்கப்பட்டும், 13.8.2013 அன்று 43 மனுக்கள் வேட்பாளர்களால் திரும்ப பெறப்பட்டும், இறுதியில் நிலுவையில் இருந்த 1148 மனுக்களுக்குரிய வேட்பாளர்கள் அனைவரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மொத்தம் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 1148 நிர்வாகக் குழு உறுப்பினர்களில் 230 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீட்டின் கீழும், 346 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும், 572 பேர் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். நான்காம் நிலையில் மொத்தம் 58 கூட்டுறவு சங்கங்களில் தேர்தல் நடைபெற்றது. இவை அனைத்திலுமே நிர்வாகக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தலைவர் / துணைத்தலைவர் தேர்தல்

நான்காம் நிலைத் தேர்தலில் இடம் பெற்றுள்ள 58 கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கூடி தங்களுக்குள் தலைவர் / துணைத்தலைவரை தேர்ந்தெடுக்க உள்ளனர். இதற்கான தேர்தல் வரும் 23.08.2013 அன்று நடைபெறவுள்ளது.

## பதவியேற்பு

நான்காம் நிலைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் 24.08.2013 சனிக்கிழமையன்று பதவியேற்க உள்ளார்கள்.

## ஐந்தாம் நிலைத் தேர்தல்

ஐந்தாம் நிலையில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு மட்டும் தேர்தல் நடைபெறவுள்ளது. மொத்தம் உள்ள ஐந்து நிலைகளில் இது ஐந்தாம் நிலை ஆகும். இதற்கான தேர்தல் அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்.

மேற்கண்டவாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு. ம.ரா. மோகன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆணையர்

## கூட்டுறவுச் சங்கங்களுக்கான நான்காம் நிலைத் தேர்தல்

## நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்வு

| வ. எண் | மாநிலத் தேர்தல் அலுவலர் | தேர்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட சங்கங்கள் | வேட்பு மனு பெறப்படாததால் தேர்தல் நடைபெறாத சங்கங்கள் | நிர்வாகக் குழு உறுப்பினர்களை போட்டியின்றி தேர்ந்தெடுத்த சங்கங்கள் | போட்டி ஏற்பட்டதால் தேர்தல் நடைபெறவுள்ள சங்கங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 57 | - | 57 | - | 57 |
| 2. | தொழில் மற்றும் வணிகத்துறை ஆணையர் | 1 | - | 1 | - | 1 |
| | **கூடுதல்** | **58** | **-** | **58** | **-** | **58** |

**ஆணையர்**